செ.வெ.எண்.61 நாள்: 22.09.2019

# விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து இ.எஸ்.பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

---------

விழுப்புரம் மாவட்டம் 075.விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து இ.எஸ்.பொறியியல் கல்லூரியில் வாக்கு எண்ணும் மையத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (22.09.2019) பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு இடைத்தேர்தல் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து வாக்கு எண்ணும் மையமான இ.எஸ்.பொறியியல் கல்லூரியில் ஸ்டிராங்க் ரூம், வாக்கு எண்ணும் அறை மற்றும் முகவர்கள் அமரும் இடம் போன்ற இடங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

இந்திய தேர்தல் ஆணையத்தால் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதிக்கு 21.10.2019 அன்று வாக்குப்பதிவு நடைபெறும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் இன்றைய தினம் வாக்கு எண்ணும் மையமான இ.எஸ்.பொறியியல் கல்லூரியினை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வு செய்ததில் போதுமான அளவிற்கு இட வசதி உள்ளது. வாக்கு பதிவு செய்யப்படும் மின்னணு வாக்கு பதிவு இயந்திரங்களை பாதுகாப்பான முறையில் ஸ்டிராங்க் ரூமில் வைத்து இரண்டு பூட்டு போடப்பட்டு சீல் வைக்கப்படும். மேலும் இவற்றினை 24 மணி நேரமும் சி.சி.டி.வி கொண்டு கண்காணிக்க

ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மேலும் மூன்று அடுக்கு பாதுகாப்பு வசதி ஏற்படுத்தப்பட்டு கண்காணிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.ஜெயக்குமார், விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு அலுவலர் திரு.மு.சந்திரசேகர், விழுப்புரம் வருவாய் கோட்டாட்சியர் திரு.கே.ராஜேந்திரன், உதவி இயக்குநர் (நிலஅளவை) திரு.டி.மணிவண்ணன், விக்கிரவாண்டி வருவாய் வட்டாட்சியர் திரு.பி.பார்த்திபன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் திரு.செல்வகுமார், உதவி பொறியாளர் திரு.கார்த்திகேயன், உயர்மின் அழுத்த இயக்குபவர் திரு.சேகர் ஆகியோர் உடனிருந்தார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.